மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்தக் குறளுக்கு அவர்கள் சொல்கிற விளக்கம் சரியானதாக இல்லை. "பெய்யெனப் பெய்யும் மழை" அதாவது தன் கணவனுக்கு அவள் மழை போன்றவள் என்ற பொருளில் சொல்லியிருக்கிறது. தாய்மார்களைக் கூப்பிட்டு "போய், நீங்கள் மழை பெய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்" என்று சொல்லி, அப்படி மழை பெய்ய வேண்டும் என்று சொன்னவுடனேயே மழை பெய்யா விட்டால், அவளுடைய கற்பில் சந்தேகம் வரும் என்ற காரணத்தினால் வள்ளுவர் ஜாக்கிரதையாக எழுதியிருக்கிறார். அந்தக் குறளுக்கு அது அர்த்தம் இல்லை.

சுற்றுலாப் பேருந்துகள்.

* 882 வினா-திரு. பி.எஸ். மணியன்: மாண்புமிகு பின்தங்கியவகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரசு சார்பில் நவீன வசதிகள் கொண்ட சுற்றுலாப் பேருந்துகள் (Tourist Bus) ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை. ஆனால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் அப்படிப்பட்ட எண்ணங்கள் உள்ளன.

Production of Paper.

*883 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state the steps taken by the Government to augment the availability of raw materials for the production of paper in this State ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பேப்பர் நிறுவனங்களுக்குத் தேவையான மூங்கில், கற்பூர இனக் கலப்பு மரங்களை வனத் துறை, விரைந்து வளரும் மரங்களை வளர்க்கும் திட்டத்தின் கீழ் பயிரிட்டு வருகிறது. இதுவரை மூங்கில் 3,663 ஹெக்டேர் பரப்பளவிலும், கற்பூர இனக் கலப்பு மரங்கள் 15,355 ஹெக்டேர் பரப்பளவிலும் பயிரிடப் பட்டுள்ளன. 1972–73-ல் இம் மரங்கள் 2,250 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இப்போது கிடைக்கக்கூடிய இந்த கச்சாப் பொருள் போதுமானதாக இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இதை அதிகரிக்க இன்னும் அதிகமான மூங்கில் மரங்களை வளர்க்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து உண்மை என்று கருதுகிறோம். அதற்காகப் பரிசீலனை செய்து, புதிதாகச் சில பகுதிகளில் மூங்கில்களை வளர்ப்பது பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசிடம் இருக்கிறது.